நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## முந்திரி மரங்கள் காய்க்காததால் விவசாயிகள் கவலை

சீ.சிவா

First Published : 22 Mar 2012 05:51:55 AM IST



விருத்தாசலம் அருகே கோட்டேரி கிராமத்தில், பருவம் கடந்து முந்திரிப் பூ பூத்திருந்தாலும், புயலின் தாக்குதலால் பூ கருகி காணப்படும் முந்திரி மரம்.

விருத்தாசலம்: புயலின் தாக்குதலில் தப்பி நிற்கும் முந்திரி மரங்கள் பருவ காலம் வந்த பிறகும் காய்க்காததால் விவசாயிகள் மிகுந்த கவலையில் உள்ளனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வீசிய புயல், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டதோடு மட்டுமல்லாமல் முந்திரி, பலா, மா, தென்னை மரங்களை அடியோடு சாய்த்து அந்த விவசாயிகளை பெரிய துயரத்துக்கு ஆளாக்கியது.

கடலூர், விழுப்புரம் மாவட்ட மக்கள் புயலின் தாக்குதலில் மெல்ல மீண்டு வரும் நிலையில், முந்திரி விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் மக்களை மேலும், மேலும் புயலின் தாக்கம் பாதிப்புக்குள்ளாக்கி வருகிறது.

பண்ருட்டி வட்டாரப் பகுதிகளில் முந்திரி மரங்கள் வேரோடு சாய்ந்து பெரும் இழப்பை ஏற்படுத்தி, முந்திரி விவசாயமே இன்னும் 10 ஆண்டுகளுக்கு இருக்காது என்ற சூழலை ஏற்படுத்தியுள்ளது.

விருத்தாசலம் வட்டாரப் பகுதிகளில் புயலின்போது பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் இருந்த முந்திரி மரங்கள் விழுந்திருந்தாலும், பெரும்பாலான முந்திரி மரங்கள் ஓரளவுக்கு புயலின் தாக்குதலை சமாளித்து நின்றது.

இதனால், புயலின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்கள், தப்பிய முந்திரி மரங்கள் காய்க்கும் என்ற ஆவலுடன் பருவ காலத்தை நோக்கி இருந்தனர்.

இருப்பினும், பிப்ரவரி 2-வது வாரத்தில் முந்திரி விளைச்சல் பருவம் தொடங்கியபோதும், இன்னும் முறையாக விளைச்சல் இல்லாததால் விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

இது குறித்து கோட்டேரி கிராமத்தைச் சேர்ந்த முந்திரி விவசாயி மு.கதிரவன் தெரிவித்தது:"முந்திரி மரங்கள் வழக்கமாக பிப்ரவரி 10-ம் தேதிக்கு மேல் குருத்து வைத்து, பூப் பூக்கும். இதையடுத்து மார்ச் மாதம் பிஞ்சு வைத்து அதிகளவில் காய்க்க ஆரம்பித்து விடும். ஆனால் புயல் வீசியதால், முந்திரி மரங்கள் கிளைகள் முறிந்தும், வேரோடும் சாய்ந்தும் விழுந்தன. இதனால், இதுவரை காய்ப்புத் தொடங்கவில்லை.

பொதுவாக முந்திரி மரத்தில் சிறிய வெட்டுக் காயம் அல்லது கிளைகள் முறிந்தால் அதன் வழியாக புழுவைத்து அந்த மரம் பட்டுப் போகும். இந்நிலையில், புயலில் தப்பிய மரங்கள், குருத்து வைத்தவுடன் ஓரளவுக்கு மன ஆறுதலுடன் இருந்தோம்.

ஆனால் தற்போது மார்ச் 20 தேதியை கடந்த பிறகும், மரம் பிஞ்சு வைக்காமலும், வைத்த ஒரு சில பிஞ்சுகளும் கருகி வருவதால், பெரிய இழப்புக்கு தள்ளப்பட்டுள்ளோம். இதோடு சேர்ந்து பனியும் கடுமையாக பொழிவதால், பருவத்தில் வந்த பூக்களும் கருகி வருகின்றன. இந்நிலையில், புயலாலும், பனியாலும் பாதிக்கப்பட்டுள்ள முந்திரி மரங்கள் தப்புவதற்கு கோடை மழை பெய்தால் மட்டுமே பயனுள்ளதாக இருக்கும்.இப்போது மழை பெய்வதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. இதனால், புயலால் வலுவிழந்து உயிரோடு நிற்கும் முந்திரி மரங்கள், கோடை வெயிலில் பட்டுப் போகும் அபாயம் உள்ளது.

பண்ருட்டி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் முந்திரி மரங்களை புயல் முழுவதுமாக தாக்கி அவர்களின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கியது.பிப்ரவரி தொடங்கி ஜூன் முதல் வாரம் வரை நடைபெறும் முந்திரி அறுவடை, மார்ச் மாதத்திலேயே பொய்த்துப் போனதால் எங்களின் எதிர்காலம் என்னவென்றே தெரியவில்லை' என கவலையுடன் தெரிவித்தார்.


இது குறித்து வேளாண்மை அறிவியல் நிலையப் பேராசிரியர்கள் தெரிவித்தது: "புயலின் தாக்குதலால் முந்திரி மரங்கள் தாமதமாக பூக்கத் தொடங்கியுள்ளன. எனவே, தற்போது தாமதமாக பூத்துள்ள பூக்களைக் காப்பதற்கு, நீர்ப் பாசன வசதியுள்ள விவசாயிகள் 2 முறை மரங்களுக்கு நீர் பாய்ச்ச வேண்டும்.

நீர்ப் பாசன வசதி இல்லாத விவசாயிகள் மேலுரமாக மோனோஅம்மேனியம் பாஸ்பேட் உரத்தை 1 லிட்டர் தண்ணீரில் 10 கிராம் வீதம் கரைத்து தெளித்தால், அதிகமாக பூவிட்டுள்ள மரங்கள் நன்கு காய்க்கும்.நீர்ப்பாசன வசதியுள்ள விவசாயிகளும் மேலுரம் தெளிக்கலாம். மேலும், தேயிலை

கொசுவின் தாக்கம் சில இடங்களில் காணப்படுகிறது. இதைத் தவிர்க்க புரசனோபாஸ் தெளித்தால் தேயிலை கொசுக்களைக் கட்டுப்படுத்தலாம்' என தெரிவித்தனர்.

## இறவை எள் சாகுபடிக்கு ஆலோசனைகள்

First Published : 22 Mar 2012 12:24:29 AM IST



கடலூர்: மாசிப் பட்ட இறவை எள் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கு வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் 1.65 லட்சம் ஏக்கரில் இறவை மற்றும் மானாவாரி எள் சாகுபடி செய்யப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் சுமார் 15 ஆயிரம் ஏக்கரில் இறவை எள் சாகுபடி செய்யப்படுகிறது. இறவை எள் சாகுபடிக்கு மாசிப் பட்டம் (ஏப்ரல்-மார்ச்) ஏற்றதாக சிறப்பானதாகக் கருதப்படுகிறது. மாசிப் பட்டத்தில் இறவை எள் விதைப்புக்கு, டிஎம்வி 3, டிஎம்வி 4, டிஎம்வி 6, கோ1, விஆர்ஐ (எஸ்வி) 1 மற்றும் எஸ்விபிஆர் 1 போன்ற எள் ரகங்கள் ஏற்றவை. ஒரு ஏக்கருக்கு தேவையான எள் விதை 2 கிலோ. 2 கிலோ எள் விதையுடன் 8 கிலோ மணல் கலந்து, நிலத்தின் மேல்பரப்பில் சீராகத் தூவவேண்டும். விதைப்புக்கு முன், கிலோவுக்கு 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். அல்லது கிலோவுக்கு 4 கிராம் திரம் அல்லது 2 கிராம் காபர்பன்டாசிம் 2 கிராம் கலந்து பூஞ்சாண விதை நேர்த்தி செய்யலாம். 2 கிலோ விதையுடன் 1 பாக்கெட் (200 கிராம்) அப்ஸ்ஃபோஸ் ஃபைரில்லம் கலந்து நுண்ணுயிர் நேர்த்தி செய்யலாம். மேலும் ஏக்கருக்கு 4 பாக்கெட் அப்ஸ்ஃபோஸ்ஃபைரில்லம் நுண்ணுயிர் உரமத்தை, நன்கு மக்கிய தூளாக்கப்பட்ட தொழுஉரத்துடன் கலந்து வயலில் தூவவேண்டும். மாங்கனீஸ் பற்றாக்குறையைப் போக்க, ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனீஸ் சல்பேட்டை, 18 கிலோ மணலுடன் கலந்து, உழவுக்குப்பின் வயலில் தூவ வேண்டும். மண் மாதிரி ஆய்வு சிபாரிசுப்படி உரமிட வேண்டும்.

இறவை எள் சாகுபடிக்கு ஏக்கருக்கு 14:9:9 என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்து தரவல்ல யூரியா 30 கிலோ, சூப்பர் 25 கிலோ, பொட்டாஷ் 15 கிலோ ரசாயன உரமிடலாம்.

விதைப்பு செய்த உடன் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பின்னர் 7 நாள்கள் கழித்து உயிர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்து 25-வது நாளிலும், பூப்பதற்கு முன் ஒரு முறையும், பூக்கும்

தருணத்தில் ஒரு முறையும், காய் பிடிக்கும் தருணத்திலும் தேவைக்கு ஏற்ப ஒன்று அல்லது இரண்டு முறை நீர் பாய்ச்ச வேண்டும். பூக்கும் தருணத்தில் அவசியம் நீர் பாய்ச்ச வேண்டும். முதிர்ச்சிப் பருவத்தில் மண்ணில் ஈரப்பதம் குறைவாக இருக்க வேண்டும். ஈரப்பதத்துக்கு மேல் தண்ணீர் பாய்ச்சினால், முதிர்ச்சி பாதிக்கப்படும். காய் பிடிப்பு திறனும் விதை உற்பத்தியும் பாதிக்கப்படும். எனவே விதைப்பு செய்த 65 நாள்களுக்குப் பின், நீர் பாய்ச்சுவதை நிறுத்திவிட வேண்டும். விதைத்த 15-ம் நாள் செடிக்குச் செடி 15 செ.மீ. இடைவெளி விட்டு, செடிகளை களைந்துவிட வேண்டும். பின்னர் 30-ம் நாள் செடிக்குச் செடி 30 செ.மீ. இடைவெளிவிட்டு, களைந்துவிட வேண்டும்.

விதைத்த 15-ம் நாளில் ஒரு முறையும், 35-வது நாளில் 2-வது முறையும் களை எடுத்து, களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். விவசாயிகள் மாசிப் பட்டத்தில் இறவை எள் சாகுபடி செய்து, கூடுதல் மகசூல் பெறலாம் என்றும் வேளாண் துறை ஆலோசனை தெரிவிக்கிறது. மேலும் விவரங்களுக்கு அருகாமையில் உள்ள வட்டார வேளாண் அலுவலர்களை நேரில் அணுகி ஆலோசனை பெறலாம்.

## வெண்டைப் பயிரை பாதுகாப்பது எப்படி?

First Published : 22 Mar 2012 12:23:42 AM IST



புதுச்சேரி: காய்கறி பயிர்களில் சாதாரணமாகக் கத்தரி, வெண்டை, மிளகாய், தக்காளி, கீரை வகைகளை விவசாயிகள் பயிர் செய்கின்றனர். இதில் வெண்டை ஒரு முக்கியமான பயிர். வெண்டைக்காயை வாரத்துக்கு இரு முறையாவது உணவில் கட்டாயம் சேர்த்தால், அறிவாற்றல் பெருகும்.

இதில் தை பட்டம், ஆடி பட்டம் ஆகிய இரு பருவங்களில் வெண்டை சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது தை பட்டச் சாகுபடி நடந்து வருகிறது. தட்ப வெப்ப நிலை மாற்றம் காரணமாக,

சூரியனின் உஷ்ணம் பூமியில் படும்போது, மண் சூடாகிறது. இதில் பூச்சிகளின் தாக்குதல் அதிகம் ஏற்படுகிறது.
வெண்டை விதைத்த ஒரு மாதத்தில் பல்வேறு பிரச்னைகள் தொடங்கும். இது குறித்த விழிப்புணர்வு விவசாயிகளுக்கு அதிகம் இல்லாததால் விளைச்சல் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் நஷ்டமடைய நேர்கிறது.
வெண்டை பயிரைக் காப்பதற்கான வழிமுறைகள் குறித்து பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் வல்லுநர் என்.விஜயகுமார் கூறியது:
வெள்ளை ஈக்கள்: வெள்ளை ஈக்களின் இனப் பெருக்கம் அதிகம் நடைபெறும். இதன் இளம் குஞ்சுகளும், முதிர்ந்த வெள்ளை ஈக்களும் இலைகளின் சாற்றை உறிஞ்சும். இலை மஞ்சளாகி, அதன் ஓரங்கள் சுருங்கிவிடும். இந்த ஈக்களால், மஞ்சள் தேமல் நோய் பிற இலைகளுக்கும் பரவும். ஒளிச்சேர்க்கை நடைபெறாமல், மகசூல் பாதிக்கப்படும்.
இவற்றைக் கட்டுப்படுத்த முன்னுக்குப் பின் முரணான, ரசாயனத் தன்மையுள்ள, அதிக விஷத் தன்மையுள்ள மருந்துகளைப் பயன்படுத்தும் போது, அப்பூச்சிகள் குறையாமல் அதிகமாகும். இதற்குக் காரணம் அவை மறு உற்பத்தித் திறன் பெற்றுவிடுவதே.
இதைக் கட்டுப்படுத்த, வெண்டை விதைத்த 30 நாளில் ஒரு ஏக்கருக்கு 25 மஞ்சள் நிற ஒட்டுப் பொறிகளை, பயிரை நோக்கி வைக்க வேண்டும். இதற்கு ரூ.11 முதல் ரூ.15 வரை செலவாகும். 30 முதல் 70 நாள்கள் வரை இந்த பொறி வயலில் இருந்தால், வெண்டையைக் காக்கலாம்.
துத்தி ரக (அபுட்டிலால் இண்டிகம்) களைச் செடிகளைப் பிடுங்கி எடுத்து அப்புறப்படுத்த வேண்டும். இந்த களையால், வெள்ளை ஈக்களின் இனப்பெருக்கம் அதிகம் இருக்கும். பொறி வைக்க முடியாவிட்டால், டைமீத்தோயேட் என்ற ரசாயன பூச்சிக்கொல்லியை ஒரு லி. நீருக்கு 2 மி. கலந்து மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். பூச்சி மருந்தையும், அளவையும் மாற்றாமல் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.
பச்சைத்தட்டுப்பூச்சி: இதுவும் ஒரு சாறு உறிஞ்சும் பூச்சி. வெள்ளை ஈயின் செயல்பாடு மெதுவாக இருக்கும். ஆனால், தத்துப்பூச்சி, தத்தித் தத்தி அடுத்தடுத்த இலைகளுக்கு பரவும். இதைக் கட்டுப்படுத்த, 5 சீதா பழத்திலிருந்து கிடைக்கும் கொட்டைகளை இடித்து, ஒரு இரவு முழுவதும் ஒரு லிட்டர் தண்ணீரில் ஊற வைத்து, மறுநாள் காலையில் மெல்லிய துணியில் வடிகட்டி, ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இது பச்சை தத்துப்பூச்சியைக் கட்டுப்படுத்தும்.
தாக்குதல் மிக அதிகமாக இருந்தால், மோனோகுரோட்டோபாஸ் அல்லது டைமீத்தோயேட் மருந்துகளில் ஒன்றை ஒரு லிட்டர் நீருக்கு 1.5 மி. கலந்து மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும்.
காய்த்துளைப்பான்: வெண்டைச் செடியில் பூ பூக்கும் தருணத்தில் ஒரு லிட்டர் நீருக்கு 3 சத வேப்ப எண்ணெய் 2 மி. வீதமும், கோபுர மார்க் காதி சோப்புக் கரைசலை ஒட்டுத் திரவமாகக் கலந்து

தெளிக்க வேண்டும். வேப்ப எண்ணெயின் கசப்புத் தன்மையால் காய்த்துளைப்பான் காயில் துளையிடாது.

அடுத்ததாக, வெண்டை பிஞ்சாக இருக்கும்போது காய்த்துளைப்பானின் தாய்ப்பூச்சிகள் (பட்டாம்பூச்சி) வரும். ஒரு ஏக்கருக்கு ஒரு விளக்குப்பொறி வைக்க வேண்டும். விளக்குப் பொறியில் 200 வாட்ஸ் பல்பு இருக்க வேண்டும். அதன் கீழே, நீரில் 2 சொட்டு மண்ணெய் கலந்து வைக்கப்பட்ட தட்டு இருக்க வேண்டும். மாலை மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை விளக்கை எரிய விட வேண்டும். இதன் மூலம் பூச்சிகள் முட்டையிடுவதைத் தடுக்க முடியும். இரவு 10 மணிக்கு மேல் எரித்தால் நன்மை செய்யும் பூச்சிகள் சிலந்தி, பொறிவண்டு, தரைவண்டு மாட்டிக் கொள்வதைத் தடுக்கலாம். ஒரு ஏக்கருக்கு ரூ.100 முதல் ரூ.125 வரையே செலவாகும்.

இனக்கவர்ச்சிபொறி: பெண் பூச்சியின் உடலில் இருந்து செக்ஸ் ஹார்மோன்களை எடுத்து இனக்கவர்ச்சி பொறியில் வைப்பார்கள். இதன் மூலம் ஆண் பூச்சிகள் கவர்ந்து இழுக்கப்பட்டு, அழிக்கப்படும். இதை ஒரு ஏக்கருக்கு 5 வைக்க வேண்டும். ஏக்கருக்கு மொத்தமாக ரூ.150 வரை செலவாகும்.

முட்டைப் பருவத்தைக் கட்டுப்படுத்த, டிரைகோகிராமா கைளோனிஸ் என்ற ஒட்டுண்ணிகளை ஒரு ஏக்கருக்கு 2 சி.சி. வீதம் எடுத்து, 12 பாகங்களாகப் பிரித்து, 12 இடங்களில் அவற்றை பிளாஸ்டிக் கப்பில் கட்டித் தொங்கவிட வேண்டும்.

அவ்வாறு செய்வதால் ஒட்டுண்ணி அட்டைகளில் இருந்து நன்மை தரும் குளவிகள் வெளியேறி, முட்டைகளைத் தேடிக் கண்டுபிடித்து அழிக்கும். காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் இந்த அட்டைகள் கிடைக்கும். ஒரு சி.சி. விலை ரூ.20.

வெண்டை விதைத்த, 40 முதல் 45 நாள்களில் புழு அதிகம் தோன்றும். வெண்டையைத் துளையிடும். அந்த பருவத்தில், மறுபடியும் காதி சோப்புடன் கலந்த வேப்ப எண்ணெய் தெளிக்க வேண்டும். அதையும் மீறி காய்த்துளைப்பான் துளையிட்டால், பெவேரியா பேசியானா ஒரு லிட்டர் நீருக்கு 4 கிராம் என்ற அளவில் கரைத்து, அதிகாலைப் பொழுதில் வெண்டைச் செடி மீது படுமாறு தெளிக்க வேண்டும்.

புழு மீது படும் பூஞ்சான்கள் நோயை உருவாக்கி, புழுக்களைச் சாகடிக்கும். பூஞ்சானம் காமராஜர் வேளாம் அறிவியல் ஒரு கிலோ ரூ.170க்கு கிடைக்கும்.

தாக்குதல் தொடர்ந்தால், பேசில்லஸ் துருஞ்சிஇயான்சிஸ் என்ற பாக்டீரிய உயிர் ரக மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து, புழு மீது தெளிக்க வேண்டும்.

தாக்குதல் மிக அதிகமாக இருந்தால், கார்பரைல் 50 டபிள்யூபி என்ற தூள் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து, தெளிக்க வேண்டும்.

நூற்புழு: வெண்டையின் வேர்ப்பாகத்தில் இருக்கும். காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை செடி திடீரென வாடும். பிறகு மீண்டும் சரியாகும். அவ்வாறு நிகழ்வது நூற்புழு இருப்பதற்கான அறிகுறி. ஒரு செடியைப் பிடுங்கிப் பார்த்தால், அதன் வேரில் நூற்புழு இருப்பதைக் காண முடியும்.

கண்ணுக்குத் தெரியாவிட்டால் ஆய்வகத்தில் பரிசோதித்துக் கொள்ளலாம். அவ்வாறு புழு இருந்தால், ஒரு ஏக்கருக்கு 200 கிலோ வேப்பம் புண்ணாக்கு போட்டு, தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும்.

தாக்குதல் அதிகமாக இருந்தால், கார்போ பியூரான் என்ற குருணை மருந்தை ஏக்கருக்கு ஒரு கிலோ அளவு எடுத்து, வயிலில் போட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒருங்கிணைந்த பூச்சி மேலான்மை முறையில் இவற்றைச் செய்ய வேண்டும். கூடுமான வரையில் செடியில் ஈரப்பதம் இருக்க வேண்டும். காயப்போடக் கூடாது.

வெண்டை உற்பத்தியை அதிகரிக்க ஒரு லிட்டர் தண்ணீரில் 10 கிராம் பொட்டாசியம் அல்லது யூரியா அல்லது இரண்டையும் சேர்த்து தெளிக்கும் போது, பூ அதிகம் இருக்கும். எதிர்ப்புத் தன்மை உருவாகும் என்றார்.

### "மானிய உதவிகளை வழங்க வேண்டும்'

First Published : 21 Mar 2012 11:12:55 AM IST

ஆரணி, மார்ச் 20: தனியார் பள்ளிகளில் 25 சதவீத கட்டாயக் கல்விக்காக அரசு வழங்கும் மானிய உதவிகளை உடனே வழங்க வேண்டும் என தமிழ்நாடு அனைத்து நர்சரி பிரைமரி பள்ளிகள் நலச்சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆரணியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அச்சங்க கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சமச்சீர் கல்வி பாட புத்தகங்களை தனியார் நர்சரி பிரைமரி பள்ளிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத்தின் மாநில தலைவர் ஏ.தாமோதரன் தலைமை தாங்கினார்.

### நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பம்: விவசாயிகளுக்கு பயிற்சி

First Published : 21 Mar 2012 02:09:10 PM IST

நீடாமங்கலம், மார்ச் 20: திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு இரண்டு நாள்கள் பயிற்சி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் 2011-2012-ன் கீழ், நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் குறித்த இரண்டு நாள் பயிற்சி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

இதற்கு தலைமை வகித்து, மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் பேசியது:

சிவகங்கை, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பண்ணை மகளிர் இந்தப் பயிற்சியில் பங்கேற்று உள்ளனர். விவசாயத்திற்கு நல்ல மண், நீர், நல்ல தட்பவெப்பம் அவசியம்.

காலத்தோடு பயிர் செய்ய வேண்டும். விவசாயிகள் தங்கள் வீடுகளிலேயே உரம் தயார் செய்ய வேண்டும். வைக்கோலைக் கொண்டு உரம் தயாரிக்கலாம். தற்போது சாகுபடி பரப்பு குறைந்திருந்தாலும், குறைந்த நிலத்தில் அதிக லாபம் பெற வழிமுறைகள் உள்ளன. சொட்டுநீர் பாசன முறையை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும்.

தண்ணீரை முறையாக பயன்படுத்திட வேண்டும். அதிகம் பயன்படுத்தினால் வேர் அழுகல் நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளது. மண்தான் நுண்ணூட்டமானது. உயிரானது. மண்ணைப் பாதுகாக்க வேண்டும். விழுப்புரம் மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி நல்ல முறையில் உள்ளது. இதுபோல பிற மாவட்டங்களிலும்

கரும்பு உற்பத்தியில் விவசாயிகள் சிறந்து விளங்க வேண்டும். இரண்டு நாள் பயிற்சியின் மூலம் விவசாயிகளுக்கு பெரும் பயனாக அமையும் என்றார் ஆட்சியர் நடராசன். பயிற்சியில் நீடாமங்கலம் வேளாண் உதவி இயக்குநர் ந. இளஞ்செழியன் கருத்துரை வழங்கினார். வட்டாட்சியர் சு. வைத்தியநாதன், ஒன்றிய ஆணையர் எஸ். கரிகாலன், கூடுதல் ஆணையர் ஆர். சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பயிற்சி வகுப்பை நிலைய உதவி போராசிரியர்கள் கை. குமணன், கு. சுதாகர், அ. காமராஜ், ஆனந்தகிருஷ்ணவேணி, ம. செந்தில்குமார் ஆகியோர் நடத்தினர்.

விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, நிலைய போராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சி.செங்குட்டுவன் வரவேற்றார். நிறைவில் இணைப் பேராசிரியர் தங்க. தாமோதரன் நன்றி தெரிவித்தார்.

## சிறு, குறு விவசாயிகளுக்கு தகுதிச் சான்று

First Published : 21 Mar 2012 03:47:13 PM IST

திண்டிவனம், மார்ச் 20: திண்டிவனம் வட்ட சிறு விவசாயிகளுக்கு தமிழக அரசு சார்பில் முழு மானியத்துடன் சொட்டு நீர்ப் பாசன இயந்திரங்கள் வழங்குவதற்காக அவர்களுக்கு தகுதிச் சான்று வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை மாவட்ட ஆட்சியர் தலைமையில் திண்டிவனத்தில் நடைபெற்றது.

சிறு குறு விவசாயிகளுக்கு அவர்களது நிலங்களில் சொட்டு நீர்ப் பாசன இயந்திரங்களை அமைத்துத் தர தமிழக அரசு வேளாண் துறை மூலம் முடிவு செய்துள்ளது. அதன்படி இரண்டரை ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் வைத்துள்ள விவசாயிகள் இந்த திட்டத்தின் கீழ் பயனடைவர். இந்தத் திட்டத்துக்குத் தகுதிபெற்ற விவசாயிகளைத் தேர்வு செய்யும் பணி கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. சுமார் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகளை மண்டல துணை வட்டாட்சியர் மதியழகன், வேணு மற்றும் நளினி ஆகியோர் தேர்வு செய்தனர். தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் திண்டிவனம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வா. சம்பத் தகுதிச் சான்றுகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் மீனா பிரியதர்ஷினி, வட்டாட்சியர் ஜோதி, ஒலக்கூர் வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) பழனிவேல், தமிழ்நாடு சிறு விவசாயிகள் முன்னேற்ற சங்க தலைவர் கடவம்பாக்கம்மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சியில்: கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கோட்டாட்சியர் க. உமாபதி தலைமை வகித்தார். வேளாண்மைத்துறை துணை இயக்குநர் இல. அன்பழகன், உதவி இயக்குநர்கள் எஸ்.ராமச்சந்திரன், பொன்னுராசன், ராமச்சந்திரன், செல்வராஜ் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்து அதில் 10 பேருக்கு சிறு குறு விவசாயிகளுக்கான சான்று வழங்கப்பட்டது. மேலும் 78 மனுக்கள் பெறப்பட்டனஅவற்றை ஆய்வு செய்து 2 நாள்களில் சான்று வழங்கப்படும் என்று கோட்டாட்சியர் கூறினார்.

விழுப்புரத்தில்: விழுப்புரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் ஆர். பிரியா விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். பிற்பகலில் வானூர் வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் விண்ணப்

பத்தை கொடுத்தனர். இந்த இரண்டு வட்டங்களிலிருந்து வந்த 106 விண்ணப்பங்களை ஆய்வு செய்ததில் 64 பேருக்கு மாலையே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் வேளாண்துறை இணை இயக்குநர் சேகர், உதவி இயக்குநர்கள் ஹரிகிருஷ்ணன், கென்னடி ஜெபக்குமார், தோட்டக்கலை இணை இயக்குநர் பன்னீர்செல்வம், உதவி இயக்குநர்கள் வீராசாமி, அன்பழகன் மற்றும் வேளாண் துறை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## நெல் கொள்முதல் செய்யாததால் விவசாயிகள் அவதி

First Published : 21 Mar 2012 01:18:48 PM IST

பெரம்பலூர், மார்ச் 20: பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள அரும்பாவூர் நெல் கொள்முதல் நிலையத்தில், அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகளை கொள்முதல் செய்யாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் நிகழாண்டு வேப்பூர் வட்டாரத்தில் 1,794 ஹெக்டேர் பரப்பளவிலும், வேப்பந்தட்டை வட்டாரத்தில் 6,939 ஹெக்டேர் பரப்பளவிலும், ஆலத்தூர் வட்டாரத்தில் 2,039 ஹெக்டேர் பரப்பளவிலும், பெரம்பலூர் வட்டாரத்தில் 2,744 ஹெக்டேர் பரப்பளவிலும் என, மாவட்டம் முழுவதும் 13,516 ஹெக்டேர் பரப்பளவில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்துள்ளனர். இதில், வேப்பந்தட்டை வட்டாரத்தில் உள்ள அரும்பாவூர், அ.மேட்டூர், பூலாம்பாடி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் நெல் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கடந்த ஆண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் அரும்பாவூர், வி.களத்தூர், கை.களத்தூர், ஒகளூர், அகரம்சிகூர், எழுமூர், நன்னை, துங்கபுரம் உள்ளிட்ட 8 பகுதிகளில் தாற்காலிக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், மாவட்டம் முழுவதும் நிகழாண்டு நெல் அறுவடை சீசன் தொடங்கியுள்ள நிலையில், அரும்பாவூர், நன்னை, ஒகளூர் ஆகிய பகுதிகளில் மட்டுமே நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், கடந்த 8ம் தேதி அன்று கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. இதனால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகளை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யத் தொடங்கினர். 82 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை ரூ. 900-க்கு விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதனிடையே, அரும்பாவூர் திரெப்பதி அம்மன் கோயில் வளாகத்தில் தொடங்கப்பட்ட நெல் கொள்முதல் நிலையத்தில் போதுமான இடவசதி இல்லாததால், விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்ட சுமார் 2400 மூட்டைகள் கோயிலின் உள்பகுதியில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், மூட்டைகள் வைப்பதற்கு போதுமான இடவசதி இல்லாததால், கடந்த 10 நாள்களுக்கும் மேலாக அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொள்முதல் செய்யவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால், விற்பனைக்காகக் கொண்டு வரப்பட்ட நெல் மூட்டைகள் அனைத்தும் கோயிலின்

வெளிப்புறத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதால், எடைக் குறைவு ஏற்பட்டு விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

விவசாயிகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டதற்கு, கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்ல வாகனங்கள் வராததால், தொடர்ந்து கொள்முதல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், நெல் மூட்டைகளை ஏற்றிச்செல்ல உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்களாம்.

இதுகுறித்து அ.மேட்டூர் கிராமத்தைச் சேர்ந்தவரும், தமிழக விவசாயிகள் சங்க மாவட்டச் செயலருமான வி.நீலகண்டன் கூறியது:

வேப்பந்தட்டை வட்டாரத்தில் நெல் அறுவடை தற்போது தீவிரமடைந்துள்ளது. நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படாமல் இருந்ததை அறிந்த நெல் வியாபாரிகள் ஒரு கிலோ ரூ. 9.50 என்ற விலையில் கொள்முதல் செய்தனர். இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்போது நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ஒரு கிலோ ரூ. 10.50க்கு கொள்முதல் செய்யப்படுவதால், அறுவடை செய்யப்பட்ட நெல் அனைத்தையும் கொள்முதல் நிலையத்திலேயே விற்பனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த 8 நாள்களுக்கும் மேலாக கொள்முதல் நிலையம் செயல்படாததால், விவசாயிகள் கொண்டு வந்த நெல் மூட்டைகள் அனைத்தும் கொள்முதல் நிலையம் எதிரே வைக்கப்பட்டுள்ளன.

இதனால், எடைக் குறைவு ஏற்பட்டு வருவாய் இழப்பு ஏற்படும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், கோடை மழை பெய்தால், அனைத்து நெல் மூட்டைகளும் வீணாகும் சூழ்நிலை உள்ளது என்றார் அவர்.

எனவே, அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகளை உடனடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதற்கும், அரும்பாவூர் உள்ளிட்ட பகுதிகளில் தாற்காலிகமாக திறக்கப்படும் நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கும் சம்பந்தப்பட்ட அலுவலர்களும், மாவட்ட நிர்வாகமும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாகும்.

## பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய வலியுறுத்தல்

First Published : 21 Mar 2012 10:28:50 AM IST

ராஜபாளையம், மார்ச் 20: நலிவடைந்துவரும் பஞ்சாலைகளைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பிரச்னைக்கு மூல காரணமாக இருக்கும் பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும் என விருதுநகர் மாவட்ட ஏ.ஐ.டி.யு.சி. தலைவர் பி.எம்.ராமசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது:

விவசாயத்துக்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்பு அளிப்பதில் ஜவுளித் துறை விளங்குகிறது. ஆனால் இன்று மின்வெட்டு, மின் விடுமுறை போன்றவற்றாலும், நாட்டில் விளையும் பருத்தி அதிகளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாலும் ஜவுளித் துறை நலிவடைந்து வருகிறது.

வாரம் 5 நாள்கூட சரிவர இயங்க முடியாத நிலையில் பஞ்சாலைகள் உள்ளதால் இங்கு பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் போதிய வருவாய் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர். பஞ்சாலைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் பின்னடைந்து விட்டது.

எனவே பஞ்சாலைகளையும், பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களையும் காக்க மத்திய அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும். பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும். தடையில்லா மின்சாரத்தை முழுமையாக வழங்க வேண்டும். வேலை இல்லாத நாள்களில் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் முழு சம்பளத்தை நிவாரணமாக வழங்க வேண்டும்.

விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும். பிராவிடண்ட் பண்ட் வட்டி

விகிதத்தைக் குறைக்கக் கூடாது. பி.எப். ஓய்வூதியம் குறைந்தபட்சமாக ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி மத்திய, மாநில அரசுகளுக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**உற்பத்தி குறைவு: வெற்றிலை விலை உயர்வு**

மார்ச் 22,2012,01:31



உத்தர பிரதேசத்தில் வெற்றிலை உற்பத்தி குறைந்து, தேவை அதிகரித்துள்ளதால், அதன் விலை 400 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனால், வெற்றிலை வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது. உத்தர பிரதேசத்தின் எட்டா மாவட்டத்தை சேர்ந்த, ஜலேசர் மற்றும் மஹோபா பகுதிகளில் வெற்றிலை அதிக அளவில் விளைகிறது. இங்கு விளைந்த வெற்றிலை முழுமையாக விற்பனை செய்யப்பட்டு விட்டதால், வங்கதேசத்தில் இருந்து வெற்றிலை இறக்குமதி செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில், வங்கதேசத்தில் இருந்தும் குறைந்த அளவிற்கே வெற்றிலை வருவதால், அதன் விலை பலமடங்கு உயர்ந்துள்ளது. "தேசி பான்' என்ற வகையை சேர்ந்த, 200 வெற்றிலை, 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது, முன்பு 15-20 ரூபாயாக இருந்தது. பீகாரில் இருந்து வரவழைக்கப்படும், "மகாய்' வெற்றிலை, 200ன் விலை 1,000 ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது. இது, முன்பு 200-300 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. வங்கதேசத்தின், "தேசி பங்ளா' வெற்றிலையின், 200 விலை, 100 ரூபாயில் இருந்து, 400 ரூபாயாக அதிகரித்துள்ளது.

## காய்கறி விலை சீரானது

பதிவு செய்த நாள் : மார்ச் 22,2012,02:01 IST

கருத்தை பதிவு செய்ய

கோயம்பேடு.மார்ச் 22-கோயம்பேட்டில், ஒருநாள் விடுமுறையால் உயர்ந்திருந்த காய்கறி விலை, நேற்று சீரானது.

இலங்கைக்கு எதிராக கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று முன்தினம், கடையடைப்பு மற்றும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

அன்று மார்க்கெட்டிற்கு வரவேண்டிய காய்கறி, பழம் மற்றும் பூக்களின் வரத்து நிறுத்தப்பட்டது.

இதனால், சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு காய்கறி மற்றும் பழங்கள்

சென்றடையவில்லை. இதனால் விலை உயர்ந்தது.
இந்நிலையில், மார்க்கெட்டிற்கு காய்கறி, பழம் மற்றும் பூக்களின் வரத்து நேற்று அதிகளவில் இருந்தது. வழக்கமாக, 300 முதல் 320 லாரிகளில் காய்கறி வரத்து இருக்கும். நேற்று 370க்கும் மேற்பட்ட லாரிகளில் காய்கறி வந்தது.
பிற மாநிலங்களில் இருந்து பழங்களின் வரத்தும் அதிகரித்தது. வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், அவற்றின் விற்பனையும் நேற்று களைகட்டியது. பூக்களின் வரத்து, நேற்று அதிகாலையிலேயே அதிக அளவில் இருந்தது.
இன்று அமாவாசை தினம் என்பதால், பூ மார்க்கெட்டில் விற்பனை சூடுபிடித்ததாக, வியாபாரிகள் கூறினர்.
கோயம்பேடு மார்க்கெட் காய்கறி மொத்த வியாபாரி சவுந்தரராஜன் கூறுகையில்,""ஒரு நாள் கடையடைப்பு முடிந்த நிலையில், மார்க்கெட்டில் இருந்து காய்கறி, பழம் மற்றும் பூக்களை அதிகளவில் சில்லறை வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.
காய்கறி மற்றும் பூக்களின் விலையில் பெரிய அளவில் மாற்றமில்லை. விலை சராசரியாகவே காணப்பட்டது" என்றார்.

## 27ல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

பதிவு செய்த நாள் : மார்ச் 22,2012,01:46 IST

கருத்தை பதிவு செய்ய
திருவள்ளூர் :விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வரும், 27ம் தேதி நடைபெறுகிறது.
திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள், 27ம் தேதி, காலை 11 மணிக்கு, கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.
இதில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய் துறை, மின்வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வேளாண்மை பொறியியல் துறை, மீன்வளத் துறை, கால்நடைத் துறை, வேளாண் விற்பனைத் துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.
எனவே, விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு, கலெக்டர் ஆஷிஷ் சட்டர்ஜி கேட்டுக் கொண்டுள்ளார்.

## நெல் விதைகள் கிடைக்காததால் ஆத்திரம் அதிகாரிகளிடம் விவசாயிகள் வாக்குவாதம்

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2012,23:14 IST

கருத்தை பதிவு செய்ய

பண்ருட்டி : பண்ருட்டியில் "தானே' புயலில் பாதித்த விவசாயிகளுக்கு அரசு வழங்கிய நெல் விதைகள் கிடைக்காததால் அதிகாரிகளிடம் விவசாயிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

பண்ருட்டி வேளாண்மை வட்டாரத்தில் உள்ள 40 கிராமங்களில் "தானே' புயலில் பாதித்த சிறு, குறு விவசாயிகளுக்கு ஏ.டி.டி.,37, ஏ.எஸ்.டி.,17 ஆகிய நெல்ரகம் 20 பைகளும், 8 கிலோ கொண்ட உளுந்து விதைகளும் விலையில்லா சிறுதளைகளை அங்குசெட்டிப்பாளையம், காமாட்சிபேட்டை, விசூர், தாழம்பட்டு, செம்மேடு, மாளிகம்பட்டு, வீரப்பெருமாநல்லூர் ஆகிய பகுதிகளுக்கு வேளாண்மை துறை சார்பில் வழங்கும் பணி நடந்து வருகிறது.

பல கிராமங்களில் விதைகள் வழங்கப்பட்ட பகுதியில் இருந்து விலையில்லா விதைகள் கிடைக்காத சிறு,குறு விவசாயிகள் 100க்கும் மேற்பட்டோர் நேற்று பண்ருட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தில் குவிந்தனர். வேளாண்மை அதிகாரிகளிடம் விலையில்லா விதைகள் வழங்க வேண்டும் என வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## சிறுதானியங்கள் உற்பத்தி பெருக்க விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 22,2012,04:20 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : கோவை மாவட்டத்தில் சிறுதானியங்கள் உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.

வேளாண்மை இணை இயக்குனர் அலுவலக பயிற்சி கூடத்தில் நடந்த பயிற்சி முகாம் நடந்தது. பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு, சூலூர், சுல்தான் பேட்டை, கிணத்துக்கடவு, ஆனைமலை வட்டாரத்தை சேர்ந்த 50 விவசாயிகளுக்கு ஐந்து நாள் பயிற்சி நடந்தது.

வேளாண்மை இணை இயக்குனர் மணிமொழி பயிற்சி முகாமை துவக்கி வைத்து பேசியதாவது: நாட்டில் சிறுதானியங்கள் உற்பத்தியும், சாகுபடி பரப்பும் குறைந்து வருகிறது.

சிறுதானியங்களான சோளம், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, சாமை, தினை, வரகு போன்ற பயிர்களை அதிக அளவில் பயிர் செய்ய வேண்டும்.

இந்த தானியங்கள் அன்றாட உணவில் சேர்த்துக்கொண்டால் மனிதர்களுக்கு சர்க்கரை நோய் உள்ளிட்ட எந்த நோயும் வராமல் ஆரோக்கியமாக வாழலாம்.

இந்த சிறுதானியங்களை பயன்படுத்தி தயாரிக்கப்படும் மதிப்புக்கூட்டப்பட்ட பலபொருட்களை கடைகளில் தேடி வாங்கி சாப்பிடுகிறோம். பண்டைய காலம் போன்று சிறுதானிய உணவு வகைகளை அன்றாம் எடுத்துக்கொண்டால் ஆரோக்கியமாக வாழ முடியும். அரிசிக்கு

சிறுதானியங்களை பயன்படுத்தலாம். சத்து மிகுந்த சிறுதானிய பயிர்களை சாகுபடி செய்வதற்கான தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.
விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப பயிற்சிகளை வேளாண்மைத்துறை அலுவலர்கள், வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர்கள் வழங்குகின்றனர். பயிற்சி முகாமில் தெரிவிக்கும் கருத்துக்களை விவசாயிகள் பயன்படுத்தி சிறுதானியங்கள் உற்பத்தியை பெருக்க வேண்டும்.
கோவை மாவட்டத்தில் கடந்தாண்டு 31 ஆயிரத்து 953 ஹெக்டர் நிலப்பரப்பில் சிறுதானியங்கள் சாகுபடி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் 33 ஆயிரத்து 890 ஹெக்டர் பரப்பில் சிறுதானியங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சிறுதானிய சாகுபடி பரப்பை இன்னும் அதிகரிக்க வேண்டும்.
இவ்வாறு, மணிமொழி பேசினார்.
நிறைவு விழாவில் வேளாண்மை துணை இயக்குனர் இளங்கோ பேசுகையில்,
""சிறுதானியங்களின் முக்கியத்துவம் பெற்று வருவதால் அவற்றை பயிர் செய்யும் முறை பற்றியும், அவசியம் பற்றி விவசாயி
கள் தெரிந்து கொள்ள வேண்டும்.
உணவு தானியங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க சிறுதானியங்கள் உற்பத்தியை பெருக்க வேண்டும்.
விவசாயிகளை ஊக்குவிக்க அரசு சார்பில் பயிற்சி முகாம், மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. தரமான உயர் விளைச்சல் ரகங்களை தேர்ந்தெடுத்து உணவு தானிய உற்பத்தியை பெருக்க வேண்டும்'' என்றார்.
முகாமிற்கான ஏற்பாடு
களை வேளாண்மை உதவி இயக்குனர் உமாராணி, வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன், துணை அலுவலர் முத்துகிருஷ்ணன், உதவி அலுவலர்கள் செய்திருந்தனர்.

## தீவனப்பயிரிட்டு அதிகளவு பணம் சம்பாதிப்பது எப்படி?

பதிவு செய்த நாள் : மார்ச் 22,2012,04:06 IST

கருத்தை பதிவு செய்ய

பெ.நா.பாளையம் : தீவனப்பயிரை சாகுபடி செய்வதால், விவசாயிகள், அதிகளவு பணம் சம்பாதிக்க முடியும் என, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை, தீவனப்பயிர் துறை பேராசிரியர் வேலாயுதம், விளக்கினார்.
தமிழ்நாடு வேளாண்மை பல்கலை தீவனப்பயிர் துறை சார்பில், சின்னமத்தம்பாளையத்தில் நடராஜன் தோட்டத்தில், வயல் விழா நடந்தது. பல்கலை இணைப்பேராசிரியர் பாபு வரவேற்றார். பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தின், தீவனப்பயிர் துறை தலைவர், கலாமணி

தலைமை வகித்தார்.

தீவனப்பயிர் துறை பேராசிரியர், வேலாயுதம் பேசியதாவது:

தமிழ்நாடு வேளாண்மை பல்கலையின், கண்டுபிடிப்புகளில் ஒன்றான, தீவனப்பயிர் கோ 4 ரகம், உலகத்தரம் வாய்ந்தது. இது ஆந்திரா, கர்நாடகா, திரிபுரா, உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், மகராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் உள்ள, கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் வழியாக, கால்நடைகளுக்கு வழங்க, பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தீவனப்பயிர்களை கருணையாகவும், பசுந்தீவனமாகவும், விற்பனை செய்யலாம். நிலத்தில் இருக்கும் போதே, அப்படியே விற்பனை செய்யலாம். இத்தகைய தீவனங்களை, பசுக்களுக்கு கொடுப்பதால், சாதாரண அளவை விட, கூடுதலாக பால் கறக்கும். பாலில் டிகிரி அளவு அதிகமாக கிடைப்பதால், பால் உற்பத்தியாளர்களுக்கு, கூடுதல் வருவாய் கிடைக்கும். தீவனப் பயிர்களை, கால்நடைகள் விரும்பி உண்பதால், அவற்றின், பால் உற்பத்தி திறனும், அதிகரிக்கும்.

தீவனப்பயிர்களை பயிர் செய்ய, விவசாயிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கையில், தமிழ்நாடு வேளாண் பல்கலை, ஈடுபட்டு வருகிறது.

இதற்காக, தீவனப்பயிரிடும் விவசாயிகளுக்கு, கால் ஏக்கருக்கான விதை மற்றும் உரத்தை, பல்கலை இலவசமாக வழங்குகிறது. பயிர் விளைச்சலின் போது, அவர்களின் தோட் டங்களுக்குச் சென்று, தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகிறோம்.

இவ்வாறு, அவர் பேசினார்.

திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், களப்பயிற்சி பெற்றனர்.பேராசிரியர் ஐயனார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## மக்காச்சோளம் விலை சரிவு விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : மார்ச் 22,2012,04:27 IST

கருத்தை பதிவு செய்ய

தாராபுரம் : மக்காச்சோளம் கொள்முதலை, கோழிப்பண்ணைகள் குறைத்துக் கொண்டதால், விலை சரிந்துள்ளது.

தமிழகத்தில் கோழிப்பண்ணைகள் அதிகளவு இருப்பதால், மக்காச்சோளத்துக்கு நல்ல விலை கிடைத்தது. ஆறு மாதங்களுக்கு முன்பு வரை, ஒரு டன், 1,600 ரூபாய் வரை விற்றது.

ஆந்திரா, மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கறிக்கோழி நுகர்வு அதிகரித்தது. அங்கு, மக்காச்சோளம் மலிவாகவும் கிடைக்கிறது. இதனால், தமிழக கோழிப்பண்ணையாளர்கள், அம்மாநிலங்களிலேயே பண்ணைகள் அமைத்து வருகின்றனர். இதனால், தமிழகத்தில் இருந்து, அம்மாநிலங் களுக்கு கறிக்கோழி செல்வது அடியோடு நின்று

விட்டது.
கறிக்கோழி உற்பத்தியாளர்கள் தங்கள் தொழிலை வட மாநிலங்களுக்கு விரிவுபடுத்தியதால், தமிழகம் முழுவதும் கறிக்கோழி உற்பத்தி குறைந்துள்ளது.
கோழிப்பண்ணைகளை நம்பி, தாராபுரம் வட்டாரத்தில், அலங்கியம், தளவாய்பட்டணம், ஊத்துப்பாளையம், சென்னக்கல்பாளையம், நரிக்கல்பட்டி, கோரிக் கடவு, தண்ணீர் பந்தல் உட்பட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிட்டுள் ளனர். அலங்கியம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மட்டும், 1,700 டன் மக்காச்சோளம் இருப்பு வைத்துள் ளனர். தற்போது, 1,090 ரூபாய்க்கு கேட்பதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இன்னும் விலை சரிந்து விடுமோ என்ற எண்ணத்தில், பலரும் மக்காச்சோளத்தை விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளனர்.

## உணவு தயாரிப்பு பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 22,2012,01:25 IST

கருத்தை பதிவு செய்ய
மதுரை :மதுரை காந்தி மியூசியத்தில், காந்தியக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், உணவு தயாரிப்புப் பயிற்சி மார்ச் 26 - 30 வரை நடக்க உள்ளது. ஐஸ்கிரீம், ஸ்குவாஷ், நெல்லிக்காய் சாறு, இயற்கை குளிர்பானங்கள், ஜிகர்தண்டா, வடக வகைகள் கற்றுத் தரப்படும். தொடர்புக்கு: 98657 91420.

## முந்திரியில் நோய் தாக்குதல்

பதிவு செய்த நாள் : மார்ச் 21,2012,22:55 IST

---

கருத்தை பதிவு செய்ய
வருஷநாடு :கடமலை-மயிலை ஒன்றியத்தில் ஆத்தாங்கரைப்பட்டி, பாலூத்து, கடமலைக்குண்டு,வருஷநாடு, வாலிப்பாறை, உட்பட 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பளவில் கொட்டை முந்தரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஏப்ரல்,மே, மாதங்களில் காய்ப்புக்கு வரும். கடந்த சில நாட்களாகவே தேயிலை கொசு நோய் தாக்குவதால்பூக்கள் உதிர்ந்து விடுகிறது. இதனால் விவசாயிகள் அதிக மகசூலை பெறுவதற்கு மருந்து தெளிக்கும் பணி நடந்து வருகிறது.